விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 175 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 238 செவ்வாய்க்கிழமை (11.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





# மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்

## ஜெய்சங்கரிடம் ஜனாதிபதி ரணில் உறுதி

(புதுடில்லி)

கல்வி மற்றும் பொருளாதார முகாமைத்துவம் ஆகிய துறைகளின் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.ஜெய் சங்கருக்கு உறுதியளித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



### அராலியில் இளம் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு பகுதியில் இளம் பெண்ணொருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியை சேர்ந்த 24 வயதுடைய சிவகரன் மயூரா என்பவரே சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

குறித்த பெண் 15

### முல்லையில் 992 விமான எதிர்ப்பு தோட்டாக்கள் கண்டெடுப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசத் தில் கிணறு ஒன்றில் இருந்து 992 விமான எதிர்ப்பு தோட்டாக்கள் கண் 15

## தமிழீழம் உருவாக வேண்டும்
### மோடியிடம் மதுரை ஆதீனம் கோரிக்கை


(சென்னை)

இலங்கைத் தமிழ் மக் களுக்காக தமிழீழம் உருவாக வேண்டும் என மதுரை ஆதீ னம் இந்தியப் பிரதமர் மோடி யிடம் கோரிக்கை முன்வைத் துள்ளார்.

நரேந்திர மோடி மீண்டும் பிரதமரானமை குறித்து மதுரை ஆதீனம் வெளியிட்டுள்ள கருத்தில்,

"இலங்கையில் இலட்சக்கணக் கான மக்களைக் கொன்று குவித்தவர் களும் வெற்றி பெற்றுவிட்டார்களே என்ற வருத்தம் எனக்கு உள் ளது.

அதன் காரண 15




### வனவளத் திணைக்களத்தால்
## 235 ஏக்கர் காணி ஓமந்தையில் விடுவிப்பு

(வவுனியா)

ஓமந்தையில் வனவளத் திணைக்களத்தால் பொதுமக் கள் பாவனைக்கு என 235 ஏக்கர் காணி விடுவிக்கப்பட் டுள்ளது.

ஓமந்தை, பனிக்கர் புளியங் குளத்தில் 235 ஏக்கர் காணி வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டுள்ளதாக வவு னியா மாவட்ட அபி விருத்திக் குழுத் 15

### யாழில் போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளை சந்தித்த சஜித்



15

### 13ஆவது திருத்தம் தொடர்பில் பேசுபவர்களால்
## மாகாண சபைத் தேர்தலை கூட நடத்த முடியாதுள்ளது
### யாழில் எதிர்க்கட்சித் தலைவர்



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்த லைக் கூட நடத்த முடியாத தலைவர்கள் 13ஆவது திருத் தம் குறித்து எவ்வாறு பேசுவார் கள் என்று நினைத்து கூட பார்க்க முடியாதுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார். 15

### வல்லிபுரம் காட்டுப் பகுதியில்
## ஒரு கோடி பெறுமதியான கஞ்சாவுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி, வல்லி புரம் காட்டுப் பகுதியில் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப் பட்டுள்ளார்.

பருத்தித்துறையில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரி வினருக்குக் கிடைத்த தகவ லின் அடிப்படையில் அவர்கள் கரவெட்டி - யாக்கரு விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து பருத்தித்துறை - வல்லிபுரம் காட்டுப் பகுதியில் சுற் 02

### ஓமந்தையில்
## சுவர் இடிந்து வீழ்ந்ததில் 2 மாத குழந்தை பலி

(வவுனியா)

ஓமந்தை - புதியவேலர் - சின்னக்குளம் பகுதியில் தற் காலிக வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இரண்டு மாத குழந்தை உயிரிழந் துள்ளது. 15

## விபரீத முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் மரணம்
### நீர்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் விபரீத முடி வெடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதில் வேவிபுரம், அச் செழு, நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த ஆனந்தன் முகுந்தன் (வயது-31) என்ற இரண்டு பிள்ளைகளின் தந் தையே இவ்வாறு 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் தமிழரசு கட்சியினரை சந்தித்தார் சஜித் பிரேமதாச



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாச தலைமையிலான குழுவினர் நேற்று திங்கட்கிழமை தமிழரசு கட்சியினரை சந்தித்தனர்.

இலங்கை தமிழரசு கட்சி அலுவலகத்தில் குறித்த சந்திப்பு நேற்று திங்கட்கிழமை (10) இரவு இடம்பெற்றுள்ளது.

கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் மற்றும் கட்சியின் சிரேஸ்ட தலைவர் சி.வி.கே சிவஞானம், நிர்வாக செயலாளர் குலநாயகம் ஆகியோருடன் எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாச தலைமையிலான குழுவினர் சந்திப்பை மேற்கொண்டனர். (ம-7,10,33)

# யாழ். ஆயர் இல்லத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் விஜயம்



(யாழ்ப்பாணம்)
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாச நேற்று திங்கட்கிழமை யாழ்.ஆயர் இல்லத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இச்சந்திப்பில் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் கலந்துகொண்டிருந்தார்.

இவருடன் மறைக்கோட்ட முதல்வர்கள், அருட்தந்தையர்கள் ஆகியோரும் எதிர்க்கட்சித் தலைவருடன் சந்தித்து கலந்துரையாடினர்.

13 ஆவது திருத்தம், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, பொது வேட்பாளர் தெரிவு போன்ற அருட்தந்தையர்களின் வினாக்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் கருத்துக்கூறியிருந்தார். (ம-7,10,33)

# இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தியை ஆரம்பிக்க ரூ.875 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)
இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு 875 கோடி ரூபாய் மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் மீளப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன், ஜனாதிபதியின் செலவுத் தலைப்புகளின் கீழ் அந்த ஏற்பாடுகளுக்கு பாராளுமன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இந்த ஏற்பாடுகள் காரணமாக பாதீட்டு பற்றாக்குறைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடுத்த வருடத்துக்கான பாதீடு சமர்ப்பிக்கப்படமாட்டாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலாக இடைக்கால ஒதுக்கீட்டு திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு முக்கிய தேர்தல் நடைபெற உள்ளதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (ம-7,10)

# அதிக காற்று காரணமாக யாழில் இரு வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களில் அதிக காற்று காரணமாக இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் ஜே 399 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வீடொன்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் ஜே 227 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வீடொன்றுமே இவ்வாறு சேதமடைந்தது.

இதன் காரணமாக இரண்டு வீடுகளைச் சேர்ந்த ஏழு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிக்கையிட்டுள்ளது. (ம-7,10,33)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 13.05.2024 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தின் தலைவர்

## அமரர் கந்தசாமி சந்திரசேகரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 12.06.2024 புதன்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் குரும்பைகட்டி ஞானவைரவர் ஆலய வளாகத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

(C-0572)

காந்தியூர்,
புலோலி வடமேற்கு,
புலோலி.

இங்ஙனம்:
குடும்பத்தினர்


## மாகாண...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பொன்றும் நேற்று நடைபெற்றது.

டில்லியில் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது, இந்திய முதலீட்டில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிப்பது குறித்து விசேடமாக ஆராயப்பட்டது.

இந்த செயற்பாடுகளை ஆராய்வதற்காக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய விருப்பதாக ஜெய்சங்கர் தெரிவித்தார்.

அண்டை நாடுகளுக்கு முதலிடம் கொடுக்கும் இந்தியாவின் கொள்கை குறித்தும் இந்த சந்திப்பில் கருத்துக்களும் பரிமாறப்பட்டன.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பொருளாதார மாற்றச் சட்டத்தின் மூலம் விவசாயம், சுகாதார கல்வி மற்றும் பொருளாதார முகாமைத்துவம் ஆகிய துறைகளின் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்தோடு உண்மை மற்றும் நல்லிணக்கச் சட்ட மூலம் எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் செயற்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக விரைவான தீர்மானத்தை எட்டுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுகா செனவிரத்ன, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா மற்றும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-7,10)


## லங்கா மஹரால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | - 1490/= | சுவிஸ் | - 2050/= |
| கனடா | - 2290/= | பிரான்ஸ் | - 2290/= |
| லண்டன் | - 1250/= | அவுஸ்திரேலியா | - 2350/= |
| அமெரிக்கா | - 2290/= | இத்தாலி | - 2490/= |
| ஜேர்மனி | - 2250/= | நோர்வே | - 2050/= |

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு
077 8393 974

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்து தரப்படும்.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719

MoneyGram. Ria MONEY TRANSFER

வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம். (1175)


## விபரீத...

உயிரிழந்துள்ளார்.

மனவிரக்தியால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த நபர் தூக்கில் தொங்கி உயிர் மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## ஒரு கோடி...

வளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது இரண்டு சாக்குகளில் அடைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 29 பொதிகள் அடங்கிய 60 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார்.


கைதான நபர் மீட்கப்பட்ட கேரள கஞ்சாவுடன் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய உறவுகளை வலுவாக தொடர இருநாட்டுத் தலைவர்களும் மீண்டும் உறுதி பூண்டனர்

(டில்லி)

**இந்திய - இலங்கை உறவுகளை வலுவாக தொடர இரு நாட்டுத் தலைவர்களும் மீண்டும் உறுதி யளித்தனர்.**



நரேந்திர மோடியின் பதவி யேற்பு விழா நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை புதுடில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் பிரமாண்ட மான முறையில் நடைபெற்றது.

அதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மனமார்ந்த வாழ்த்துக்களை நேரில் சென்று தெரிவித்திரு ந்தார். இதன்போது இரு நாட் டுத் தலைவர்களும் உறுதிய ளித்தனர்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, நேபாள பிரதமர் புஷ்பகமல் தஹால், மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முயிசு, சீஷெல்ஸ் உப ஜனாதிபதி, மொரீஷியஸ் பிரதமர் மற்றும் பூட்டான் பிரதமர் உட்பட பிராந்திய அரச தலைவர்கள் பலர் இந்த பதவியேற்பு விழா வில் கலந்து கொண்டதுடன் பிராந்திய அரச தலைவர் களில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவுக்கு உயர் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர், பிராந்திய தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி குழுப் புகைப் படம் எடுத்துக் கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவுக்கு பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்த இருக்கை வழங்கப்பட்டது.

இதேவேளை பிரதமர் நரேந்திர மோடி ஏற்பாடு செய்திருந்த இராப்போசன விருந்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய அரச தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவின் பிரசன்னம் குறி த்து இந்திய ஊடகங்கள் முக்கிய இடத்தை வழங்கியிருந்த தோடு பிரதான சுற்று வட்டங் களைச் சுற்றி இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் மோடியின் உருவம் பொறிக் கப்பட்ட பதாகைகளும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. (நி-6)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப் படும் மாதாந்த கொடுப்பன வான 2500 ரூபாயை 5000 ரூபாயாக அதி கரிக்க அரசாங்கம் தீர்மானித்துள ளது.

அகுனகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலே விவசாய மற்றும் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, இலங்கை யில் உள்ள சுமார் 34,000 முன்பள்ளி ஆசிரி யர்களு க்கு எதிர்காலத்தில் இதே கொடுப் பனவு கிடைக்கு மென அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வாரம் இடம்பெற்ற அமை ச்சரவை உபகுழுக் கூட்டத் தில் இது தொடர்பில் கலந் துரையாடியதாக தெரிவித்த அமைச்சர், முன்பள்ளி ஆசிரியர்களின் 2500 ரூபா கொடுப்பனவை 5000 ரூபாவாக அதிகரிக்க ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள் ளதாகவும் தெரிவித் தார். (நி-6)

## முட்டை உற்பத்தி இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)



இலங்கையில் மாதாந்த முட்டை உற்பத்தி ஐந்து முதல் ஆறு இலட்சம் வரை அதிகரித்துள்ளதாக முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் எச்.எம்.பி.ஆர். அழககோன் தெரிவித்து ள்ளார்.

இதேவேளை, நாட்டின் மாதாந்த முட்டை நுகர்வு சுமார் ஒரு மில்லியனால் அதிகரித்துள்ளதாக கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6)

## ரணில் ஆட்சியில் நீடித்தால் மக்கள் வீதிக்கிறங்கி போராடுவர்

### எச்சரிக்கை விடுத்த தேரர்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க மேலும் 2 வருடங்களு க்கு ஆட்சியில் நீடிப்பாரா யின் மக்கள் வீதியில் இறங்கி போராட்டங் களை முன்னெடுக்கும் நிலை ஏற்படும் என பத்தர முல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மீரிகம பகுதியில் அண்மையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அரசியல் கட்சிகள் பல தமது கட்சி சார்பாக வேட்பாளர் களை முன்னிறுத்த முடி யாத நிலையில் உள்ள னர்.பாலித ரங்கே பண் டார தேர்தலை பிற்போடு வதற்கு முயற்சிக் கின் றார்.

ரணில் விக்கிரமசிங்க மேலும் 2 வருடங்க ளுக்கு இந்த நாட்டில் ஆட்சியில் நீடிப் பாராயின் சில பிரச்சினைகள் தோற் றம் பெறும்.

மக்கள் வீதியில் இற ங்கி போராட்டம் முன் னெடுக்கும் நிலையும் ஏற்படும்.

ஜனாதிபதித் தேர்த லுக்கு முன்னதாக இந்த நாட்டில் பொதுத் தேர்தல் இடம் பெற்றால் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதி தேர்தலை நடத்தமாட்டார் என தேரர் தெரிவித்து ள்ளார். (நி-6)

## தரமற்ற சவர்க்காரங்களால் தோல் நோய் ஏற்படும் அபாயம்

### குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

தரமற்ற சவர்க்காரம் பயன் படுத்துவதால் சிறு வர்களின் தோலில் பல் வேறு உபாதைகள் ஏற்ப ட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கத் தின் தலைவி பிரியங்கனி சுசங்கிகா தெரிவித்துள் ளார்.

தற்போதைய பொருளா தாரச் சூழலுக்கு ஏற்ப சந்தையில் கிடைக்கும் தரக்குறைவான சவர்க் காரங்களை பல பெற்றோர் கள் தங்கள் பிள்ளைகளுக் காக கொள்வனவு செய்கின் றனர்.

விலைவாசியை குறி வைத்து சில குழுக்கள் நுகர்வோரை ஏமாற்றி தரமற்ற சவர்க்காரங்களை சந்தையில் சேர்த்துள்ள தாக தெரியவந்துள்ளது.

உலகின் பல்வேறு பகு திகளில் இருந்து பல்வேறு தோல் சிக்கல்களைக் கொண்ட சிறுவர்களை பற்றி அறிந்தோம்.

அதனால்தான் சிறுவர் களின் தோலுக்கு பொருந் தாத தரமற்ற சவர்க்காரங் களை பயன்படுத்தக் கூடாது.

நிகழ்காலத்தை விட எதிர் காலத்தில் தரமற்ற சவர்க் காரங்களை பயன்ப டுத்துவதால் ஏற்படும் பக்கவிளைவுகளை குழந் தைகள் சந்திக்க நேரிடும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

சிறுவர்களுக்கான சவர்க்காரங்களில் 78 சதவீதத்திற் கும் அதிக மான TFM இருக்க வேண்டும்.

தரநிலைகள் பணியகம் தேவையான அளவு TFM கொண்ட சவர்க்காரங் களை மட்டுமே அங்கீக ரிக்கிறது.

எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து தரமான சவர்க் காரங்களை மட்டுமே பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம் என அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கத் தின் தலைவி பிரியங்கனி சுசங்கிகா தெரிவித்துள் ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெருப்பாக பும்ரா

# சிறப்பாக இந்தியா

## கடைசி ஓவரில் வீழ்ந்தது பாகிஸ்தான்

உலக கோப்பை லீக் போட்டியில் பும்ரா "வேகத்தில்" மிரட்ட இந்திய அணி 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 120 ரன்களை விரட்டிய பாகிஸ்தான் அணி கடைசி ஓவரில் வீழ்ந்தது.

வெஸ்ட் இண்டீஸ், அமெரிக்காவில் "ரி-20" உலக கோப்பை தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நியூயோர்க் எய்சன்ஹவர் பார்க்கில் உள்ள நசாவ் கவுன்டி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடந்த "ஏ" பிரிவு லீக் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின.

மழையால் போட்டி 50 நிமிடம் தாமதமாக துவங்கியது. "டொஸ்" வென்ற பாகிஸ்தான் கப்டன் பாபர் ஆசம், "பீல்டிங்" தேர்வு செய்தார்.

இந்திய அணிக்கு கோலி (4), கப்டன் ரோகித் (13) சுமாரான துவக்கம் கொடுத்தனர்.பின் இணைந்த ரிஷப் பன்ட், அக்ச்ர் படேல் ஜோடி விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டது. ஷாகீன்ஷா அப்ரிதி வீசிய 5 ஆவது ஓவரில் வரிசை யாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார் அக்சர். முகமது ஆமிர் வீசிய 6ஆவது ஓவரில் 2 பவுண்டரி விரட்டினார் பன்ட் மூன்றாவது விக்கெட்டுக்கு 39 ரன் சேர்த்த போது நசீம் ஷா பந்தில் அக்சர் (20) போல் டானார்.

பொறுப்பாக ஆடிய ரிஷப் பன்ட், ஹாரிஸ் ராப் வீசிய 10ஆவது ஓவரில் "ஹாட்ரிக்" பவுண்டரி விளாசினார். சூர்யகுமார் (7), ஷிவம் துபே (3) ஏமாற்றினர். முகமது ஆமிர் வீசிய 15ஆவது ஓவரின் முதலிரண்டு பந்தில் பன்ட் (42), ஜடேஜா (0) "பெவிலியன்" திரும்பினர். ஹர்திக் பாண்ட்யா (7), பும்ரா (0), அர்ஷ்தீப் சிங் (9) சோபிக்கவில்லை.

இந்திய அணி 19 ஓவரில் 119 ரன்னுக்கு "ஓல்-அவுட்" ஆனது. சிராஜ் (7)அவுட்டாகாமல் இருந்தார்.

சுலப இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணி, இந்திய வீரர்களின் அபார பந்துவீச்சில் ஆட்டம் கண்டது. கணிக்க முடியாத நியூயோர்க் ஆடுகளத் தில் ரன் எடுக்க முடியாமல் திணறியது. முதல் விக்கெட்டுக்கு 26 ரன் சேர்த்த போது பும்ரா "வேகத்தில்" பாபர் (13) வெளியேறினார். உஸ்மான் கான் (13), பகர் ஜமான் (13) சோபிக் கவில்லை. தொடர்ந்து மிரட்டிய பும்ரா பந்தில் முகமது ரிஸ்வான் (31) அவுட் டானார். ஷதாப் கான் (4), இப்திகார் அகமது (5) சொற்ப ரன்னில் அவுட்டாகினர்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 18 ரன் தேவைப் பட்டன. அர்ஷ் தீப் சிங் பந்துவீசினார். முதல் பந்தில் இமாத் வாசிம் (15) அவுட்டானார். அடுத்த 5 பந்தில் 11 ரன் மட்டும் கிடைத்தது. பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 7 விக்கெட் டுக்கு 113 ரன் எடுத்து தோல்வியடைந்தது. நசீம் (10) அவுட்டாகாமல் இருந் தார். இந்தியா சார்பில் பும்ரா 3 விக் கெட் சாய்த்தார். (நி-6)





## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி மற்றும் பராமரிப்பு வேலைத்திட்டங்கள் - 2024
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி மற்றும் பராமரிப்பு நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036, E-Mail: pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 15.00 மணி வரை 11.06.2024 ஆம் திகதியிலிருந்து 24.06.2024 ஆம் வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் இடத்திலிருந்து 11.06.2024 ஆம் திகதியிலிருந்து 24.06.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/= (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 25.06.2024 திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.


| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (Roads) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/PSDG/W/04/2024 | Renovation of Paththavalai Main Road | Maintenance | 1.27 Mn | 45 நாட்கள் | C9 and C8 | 20,000.00 | 10.09.2024 |
| NP/14/45(3)/PL/PSDG/W/05/2024 | Renovation of Kottandarkulam Road | Maintenance | 3.38 Mn | 45 நாட்கள் | C8 and C7 | 50,000.00 | 24.09.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/07/2024 | Reconstruction of Mullipattu Sub Office Road | Council Fund | 5.59 Mn | 60 நாட்கள் | C7 and C6 | 81,000.00 | 08.10.2021 |
| NP/14/45(3)/PL/PSDG/W/06/2024 | Renovation of Peralai Main Road | Maintenance | 1.69 Mn | 45 நாட்கள் | C9 and C8 | 25,000.00 | 10.09.2024 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 18.06.2024 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர், பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

(C-0573)


## சம்பியனான அல்காரஸ்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒற்றையரில் ஸ்பெயினின் அல்காரஸ் சம்பியன் பட்டம் வென்றார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில் உலகின் "நம்பர்-3" ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் 21, உலகின் "நம்பர்-4" ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 27, மோதினர்.

முதல் செட்டை 6-3 எனக் கைப்பற்றிய அல்காரஸ், இரண்டாவது செட்டை 2-6 என இழந்தார். மூன்றாவது செட்டில் மீண்டும் அசத்திய ஸ்வெரேவ் 7-5 என தன்வசப்படுத்தினார்.

பின் எழுச்சி கண்ட அல்காரஸ், 4ஆவது செட்டை 6-1 என மிகச்சுலபமாக வென்றார். இதனையடுத்து போட்டியின் முடிவு 5ஆவது செட்டுக்கு சென்றது. இதில் அசத்திய அல்காரஸ் 6-2 எனக் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்றார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயார்

## நாமல் அதிரடி

(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பொருத்தமான வேட்பாளரை கண்டுபிடிக்க முடியாவிட்டால், தேர்தலில் போட்டியிட தான் தயார் என நாமல் ராஜபக்ஷ செயற் குழுவிற்கு அறிவித்துள்ளார்.**




கடந்த 7 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்று சபை மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கூடிய போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது தொடர்பாக கட்சியின் உத்தியோகபூர்வ உடன்பாடு எட்டப்பட வில்லை என்பதுடன் எவரும் எதிர்த்ததாக தெரிவிக்கப்படவில்லை. அக்கட்சியின் தேசிய அழைப்பாளராக ரோஹித அபேகுணவர் தனவின் பெயரையும் நாமல் ராஜபக்ஷ முன் வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் எவ்வித தயக்கமும் இன்றி பதவியை ஏற்றுக்கொண்டுள்ள தாகவும், நாமல் ராஜபக்ஷவின் உள்நோக்கம் குறித்து செயற் குழு உறுப்பினர்கள் குழப்பம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# இந்திய பிரதமர் மோடி இலங்கை வர உத்தேசம்

## ஜெய்ஷங்கர் தெரிவிப்பு



(டில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்கச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய் ஷங்கருக்கும் இடையிலான இருதரப்பு கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை டில்லியிலுள்ள ஐ.டி.சி. ஹோட்டலில் இடம்பெற்றது. இதன் போதே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான விஜயம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.திரு.
**சுப்பையா சிவபாதலிங்கம் (ராசா)**

காலமெல்லாம் எம்மை காத்திருப்பாய்
என்றிருக்க- நீ கண்ணீரை
தந்துவிட்டு விண்ணோடு
சென்று மூன்று ஆண்டுகள் ஆனது
ஆனாலும் ஆறவில்லை எம் துயர்
உன் அன்பு முகமும் நேசப் புன்னகையும்
மறையவில்லை எமைவிட்டு
வருடங்கள் நீளலாம்- ஆனால்
உன் நினைவுகள் என்றும் நீங்காது!

(0094)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்
சுந்தரலிங்கம்(அண்ணா)


# வடக்கில் விமானக் கமராக்களை

## பொருத்துவதற்கு அனுமதி கோரிய இந்தியா

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மன்னார் தீவின் மணல்திட்டுகள் உட்பட பல இடங்களில் ஆளில்லா விமான கமராக்களை பொருத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா அனுமதி கோரியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

யோகா பயிற்சிகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் திட்டத்துக்காக என தெரிவித்து இந்த அனுமதியை இந்திய உயர்ஸ்தானிகராலயம் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னாரின் மணல் திட்டுகள், மன்னாரின் இராட்சத மரம் மற்றும் நெடுந்தீவு உள்ளிட்ட எட்டு பிரபலமான இடங்களில் ஆளில்லா விமானக் கமராக்களை பொருத்துவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-6)

# இராசிபலன்

11.06.2024
வைகாசி 29 செவ்வாய்கிழமை
பஞ்சமி முன்னிரவு 7.10 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 1.32 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம்.
கேட்டை, மூலம்.

வள்ளுவன்

**மேஷம்** – தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

**கடகம்** – பயணங்கள் மூலம் சுப செய்திகளைப் பெறுவீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** – செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்** – பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** – வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறைகாட்டுவர், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வேலைச் சுமை அதிகரிக்கலாம், வரவைவிட செலவு அதிகமாகும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்** – வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** – கூட்டுத்தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மிதுனம்** – நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், சந்தித்த நண்பர்களால் சந்தோசமுண்டு.

**கன்னி** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணைபுரியும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு** – கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**மீனம்** – பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.

நீ எதை இழந்தாலும் நம்பிக்கையை இழக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ ஆய்வு மாநாடு யாழ். பல்கலையில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

"உலகளாவிய நிலைபேண் தன்மைக்கான ஊக்கமளிக்கும் மாற்றம்" என்ற ஆய்வுக் கருப்பொருளிலான 8ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் ந.கெங்காதரன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சைமன் பெல் மற்றும் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டி.என்.ஜெயந்தா ஆகியோர் முதன்மைப் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

மேலும் ஆய்வுப் பரப்புகளை கொண்ட பல ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. குறித்த ஆய்வு மாநாடு நாளை மற்றும் நாளை மறு தினம் ஆகிய இரு தினங்கள் இடம்பெறவுள்ளது. பல்கலைக்கழகத்தின் பொன் விழா மற்றும் பீடத்தின் வெள்ளி விழாவின் அடையாளமாக இந்த மாநாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.(நி-6)




யாழ்.நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவப் பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் பக்தி பூர்வமாக ஆரம்பமானது. தொடர்ந்து 12 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 20ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (படங்கள்- சிவசாந்தன்)



வடமராட்சி கிழக்கு நித்திய வெட்டை திருமுக ஆண்டவர் ஆலயம் யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிர காசம் ஆண்டகையால் கடந்த சனிக்கிழமை திறந்து வைத்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (படம்-மகாலிங்கம்)

# கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் நினைவேந்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)



மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 38 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவு தின அஞ்சலி நிகழ்வானது குருநகர் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மீனவர்களின் உறவினர்கள், கிறிஸ்தவ மதகுருமார்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு கொல்லப்பட்ட மீனவர்களுக்காக வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் அவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தினர்.

1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி குருநகர், இறங்குதுறையில் இருந்து கடற்தொழிலுக்கு சென்ற மீனவர்கள் 31 பேரும் மண்டைதீவு கடலில் வைத்து கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6-33)



யாழிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் யாழ். வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரிக்குச் சென்று 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்களுடன் ஸ்மார்ட் வகுப்பறையை கையளித்ததுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு ஒரு இலட்ச ரூபாய் நிதியுதவியையும் வழங்கி வைத்தார். (படம் -சிவசாந்தன்)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -24, மாட்டீன் வீதி, 21A ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் விக்டர் ஜோன்பிள்ளை என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் விஸ்வலிங்கம் கந்தையா கைம்பெண் பொன்னு 02.10.1971 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு E.கோபாலசிங்கம் முகதாவில் 126 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அவரது மகளான விஸ்வலிங்கம் கந்தையா மகள் சிவபாக்கியம் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை இராமசாமி பெருமாளும் பெண் சிவபாக்கியம் உம் 22.08.1982 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பசுபதிப்பிள்ளை கதிரவேலு முகதாவில் 11224 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் கந்தையா செல்வலிங்கம் உம் பெண் தனபாக்கியலெட்சுமியும் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை கந்தையா செல்வலிங்கம் கைம்பெண் தனபாக்கிய லெட்சுமியும், செல்வலிங்கம் சஞ்சிவலிங்கம் உம், செல்வலிங்கம் இராஜலிங்கம் உம், 17.03.2014ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி. சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் 9793 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் செல்வலிங்கம் இரட்ணலிங்கம் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை செல்வலிங்கம் இரட்ணலிங்கம் 12.05.2018ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சிவசுப்பிரமணியம் ஜோதிலிங்கம் முகதாவில் 262 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் பத்மநாதன் கைம்பெண் யோகலெட்சுமி என்பவரிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் மாநகர சபை, சுண்டுக்குளி இறை யாழ் நகர் கிழக்கு **J/74** கிராம அலுவலர் பிரிவு "நரிஞ்சித்தறை" நில.பர ஒன்றும் (01) குளி ஒன்று தசம் ஒன்றும் (1.1) வீடும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும், இதடங்கலிற் சொரியலாய் நன்கொடை ஏற்பவரின் பாகம் உட்பட 9/10 பங்கிற்காக மறுபங்காளருடன் மனமொத்து அளவின்படியும் ஆட்சியின்படியும் நில.பர 01 குளி 2.47 ஆட்சி செய்து வரப்படுகின்றது. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி.தங்கராஜா அவர்களின் 2018.05.07 ஆம் திகதிய 10068 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பர 01 குளி 2.47 இற்கும் எல்லைகள்.

கிழக்கு -மைக்கல் செபமாலை கைம்பெண் இரத்தினத்தின் ஆதனம்.
வடக்கு -பத்மநாதன் ராங்கநாதனின் ஆதனம்.
மேற்கு-மாட்டீன் ஒழுங்கை.
தெற்கு -பத்மநாதன் மகள் தர்மினியின் ஆதனம்.


இதன் மிகுதிக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்.

தற்போது யோகலெட்சுமி பத்மநாதன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யோகலெட்சுமி பத்மநாதன் என்னும் பெயர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம் காணும் அராலி வடக்கு நாகேந்திரமடம் திருவருள்மிகு புளியடி ஞானவைரவர் தேவஸ்தானம்




நாளை 12 ஆம் திகதி கும்பாபிஷேகம் காணும் அராலி வடக்கு நாகேந்திரமடம் திருவருள்மிகு புளியடி வயிரவர் ஆலய மஹா கும்பாபிசேகத்தை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

தமிழர்களின் கட்டடக் கலைப் பாணியின் தோற்றுவாயாக அமைந்தவர்கள் பல்லவ மன்னர்கள் கி.பி. 6-9 ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தை அரசாண்ட பல்லவ மன்னர்களில் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்ம வர்மன், முதலாம் இராஜசிம்மன் முதலாய மன்னர்கள் முக்கியமானவர்கள். இவர்களால் வடிவமைக்கப்பட்ட ஆலயங்களை வரலாற்று ஆய்வாளர்கள் குடைவரைக் கோவில்கள், கற்றளிகள் அல்லது ரதக் கோவில்கள், கட்டு மானக் கோவில்கள் எனப்பகுத்து ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

பல்லவர் கால அரசியலிலும் சரி கட்டடக் கலை மரபிலும் சரி சிங்கம் முக்கியம் பெறுகின்றது. அதாவது முதலாம் நரசிம்மவர்மன் என்ற பல்லவ மன்னன் வடக்கே இருந்த வாதாபி என்ற இராச்சியத்தை வெற்றி கொண்ட பின்னர் தனது கொடி இலட்சினைகளாக இருந்த ரிஷபத்தை சிங்கமாக மாற்றியதாக வரலாறுகள் கூறுகின்றன. இதனால் நரசிம்மவர்மனுக்குப் பின் வந்த பல்லவர் காலக் கட்டடங்களில் சிங்கங்கள் முதன்மை வகிப்பதைக் காணலாம்.

இவ்வாறு பல்லவர் காலச் சிங்கமுக அடையாளங்களுடன் கருங்கற்களால் அமைக்கப்பட்டு 12.06.2024 இல் கும்பாபிஷேகம் காணும் ஆலயமே அராலி வடக்கு நாகேந்திரமடம் புளியடி ஞானவைரவர் கோவிலாகும். இக் கோவில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் தோற்றம் பெற்றதாகும். அராலி வடக்கைச் சேர்ந்த சைவப் பெரியார் வையிரவநாதர் அவர்கள், தான் வணங்கி வழிபடுவதற்காக அராலி வடக்கில் உள்ள அற்புதவாசா என்ற தனது வீட்டிலே ஐம்பொன்னால் ஆன வைரவர் திரிசூலத்தை வைத்து வழிபட்டார். இவ்வழிபாடு வீட்டில் செய்வதை விட தனியாலயம் அமைத்துச் செய்வதே சாலச் சிறந்தது என்பதை உணர்ந்து அராலி வடக்கு நாகேந்திர மடத்தடியில் உள்ள தனது சொந்த வளவில் புளியமரத்துக்குக் கீழ் அவ் வயிரவர் திரிசூலத்தை வைத்து வழிபட்டார். அதன் பின்னரே இவ்வாலயம் புளியடி ஞான வைரவர் ஆலயம் எனப் பெயர் கொண்டது. வையிரவ நாதர் அவர்களைத் தொடர்ந்து இவ்வாலயத் திருப்பணிகளையும் பூசை வழிபாடுகளையும் அவருடைய புத்திரர்களாகிய வ.கார்த்திகேசு (சிறாப்பர்) வ.சுந்தரம் ஆகிய இருவரும் முன்னெடுத்து செய்திருக்கின்றார்கள்.







புளியடியில் அமைக்கப்பட்ட வைரவர் ஆலயம் ஆரம்பத்திலேயே சுண்ணாம்புச் சுவர்களால் அமைக்கப்பட்டு வழிபாடுகள் செய்யப்பட்டன. கடந்த 2003 ஆம் ஆண்டில் இவ்வாலயம் ஆலய ஸ்தாபகர் வைரவ நாதர் அவர்களின் வம்சத்தின் கொள்ளுப் பேரனாகிய வேத நெறிச்செல்வன் திருக்குமாரன் நடேசன் அவர்களினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு 2006 மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இவ்வாலயம் கருங்கல் வேலைகளினால் அலங்கரிக்கப்பட்டு 12.06.2024 இல் கும்பாபிஷேகம் காண்கின்றது. இக்கருங்கற் திருப்பணியை செவ்வனே நிறைவேற்றியவர் ஸ்தாபகர் வம்சக் கொள்ளுப் பேரனாகிய இவ்வாலயத் தர்மகர்த்தாவுமாகிய வேதநெறிச்செல்வன் திருக்குமாரன் நடேசன் ஆவார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்துள்ள இவ்வாலயத்தில் மூலமூர்த்தியாக ஐம்பொன்னினால் அமையப் பெற்ற முத்தலைச் சூலமும், எழுந்தருளி மூர்த்தியாக ஐம்பொன்னினால் உருவாக்கப்பட்ட வைரவர் திருவிக்கிரகமும், பரிவார மூர்த்தியாக விநாயகப் பெருமானும் இருக்கின்றனர். இவ்வாலயத்தின் தலவிருட்சமான புளியமரம் ஆலயத்தின் ஈசான மூலையில் தற்பொழுதும் உள்ளது. இவ்வாலயத்தின் தீர்த்தக் கிணறு ஆலயத்தின் வடக்கு வீதியில் கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது.

நகேந்திரமடம் வீதியூடாக வருகின்றபோது வீதியின் தெற்குத் திசையிலே வடக்கு நோக்கியதாக கருங்கற் தூண்களை சிங்கங்கள் தாங்கி நிற்க இராஜகோபுரம் மூலஸ்தானம், விமானம், அர்த்தமண்டபம், வசந்தமண்டபம் பரிவார விநாயகர் ஆலயம் என்பவற்றோடு கலையம்சமாகக் காட்சி தருகின்றது. ஆலயத்தில் மொத்தம் 28 கருங்கற்றூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்களை கீழ் இருந்து சிங்கங்கள் தம் தலையில் தாங்கி நிற்கின்றன.

ஆலயத்தின் முன்னே இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இராஜகோபுரத்தின் இரண்டு கரைகளிலும் இரண்டு நாசித் தலைகளும் நடுவில் கருங்கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கலசங்கள் ஐந்தும் முற்பகுதியில் வைரவப் பெருமானின் திருவிக்கிரகமும் நான்கு நந்திகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலய இராஜ கோபுரத்தில் காணப்படும் சிறந்த கலை மரபாக சொல்லப்படுவது கருங்கல்லான கலசங்களும் கோபுரத்தை அடுத்து இருமருங்கும் இருக்கும் நாசித் தலைகளுமாகும்.

அடுத்து இவ்வாலயத்தில் சிறப்புப் பெறுவது மூலஸ்தானமாகும். வடக்கு நோக்கியதான மூலஸ்தானம் வாசலின் இரு பகுதிகளிலும் இரண்டு ஆனைக்கால் சிற்பங்களையும் வாசலின் மேற்பகுதியில் கஜலக்சுமி அம்பாள் விக்கிரகத்தையும் வெளிப்பக்கத்தில் ஐந்து மாடக் கோவில்கள் அமைக்கப்பட்டு அவற்றில் முறையே நர்த்தன கணபதி, பிரம்மசாஸ்த்தா, தெட்சணா மூர்த்தி, லிங்கோற்பவர், விஷ்ணு, துர்க்கை ஆகியோரும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர்.

மூலஸ்தானத்தின் மேற்பகுதியில் எண் கோணப் பண்டிகை அமைப்பில் விமானம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கருண கூடு சாலைகள், நந்திகள் மற்றும் பூதநாதர்களின் சிற்பங்கள் கருங்கல்லினால் செய்யப்பட்டுள்ளன. விமானத்தின் நான்கு திசைகளிலும் முறையே வடக்கில் பிரம்மதேவரும் கிழக்கில் வைரவரும் தெற்கில் கல்லாலமரத்தில் அமைந்த தெட்சணாமூர்த்தியும் மேற்குப் பகுதியில் பத்மாசனத்தில் அமர்ந்த மகாவிஷ்ணுவும் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளனர். விமானத்தின் மேல் பித்தளையால் ஆன கலசம் வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல அழகிய சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட வசந்த மண்டபம், விநாயகர் ஆலயம் என்பன அமைந்துள்ளன. இவ்வாலயத்தில் இக்கும்பாபிஷேகத்தோடு பலிபீடம், சுணைவடிவம் என்பன செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இவ்வாலயத்திலே தைப்பொங்கல் உற்சவம், மாதவெள்ளி உற்சவம், சித்திராப் பௌர்ணமி உற்சவம், கும்பாபிஷேக மணவாளக் கோலம் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இன்று எழில்மிகு ஆலயமாக இருக்கும் இவ் ஆலயத்தின் சிற்ப வேலைகளை முன் நின்று செய்த தலைமை ஸ்தபதியார் தென் இந்தியா மாமல்லபுரம் ஸ்தபதி கலாநிதி கே.தெட்சணாமூர்த்தி ஆவார் இவ்வாலயத்தை நிர்மாணித்த பெருமைக்குரியவர் தர்மகர்த்தா வேதநெறிச் செல்வன் திருக்குமாரன் நடேசன் ஆவார்.

கலையம்சம் பொருந்தி காண்போரின் கண்களைக் கவரும் இவ்வாலயம் ஈழத்தில் இன்று உள்ள ஆலயங்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாகும். 21 ஆம் நூற்றாண்டிலும் பல்லவர் கால கலையம்சம் சிறப்புற்றிருப்பதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும். மேலும் இவ்வாலய கும்பாபிஷேக வைபவங்களை தமிழ்நாடு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிவாச்சாரியார்கள் தலைமை தாங்கி செய்கின்றார்கள் என்பதும் சிறப்புக்குரியதாகும்.

**சைவசித்தாந்த பண்டிதர்,**
**அராலியூர்.**
**கணேச மங்களமூர்த்தி,**
**ஆசிரியர்,**
**யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பக்தர்கள் சென்ற பேருந்து மீது துப்பாக்கி சூடு - 9 பேர் பலி




(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பக்தர்கள் சென்ற பேருந்து மீது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் 9 பேர் உயிரிழந்ததாக இந்திய செய்திகள் தெரிவித்துள் ளன.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் ரியாசியில், புனித தலத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த பக்தர்கள் சென்ற பேருந்து மீது நேற்று முன்தினம் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம் பெற் றுள்ளது.

இதில், 9 பேர் உயிரிழந்துள்ளதுடன் 33 பேர் காயமடைந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பேருந்து சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் பள்ளத்தில் கவிழ்ந்தமையும் குறிப்பிடத் தக்கது. (நி-6)

## கலைக்கப்ப

## சூடுபிடிச்

(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதி

கலைத்துள்ளதாக சர்வ



பாராளுமன்றம் கலைக் கப்பட்டதாக அறிவித்த அவர், ஜூன் 30 மற்றும் ஜூலை 7ஆம் திகதிகளில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று தெரி

## ஜி7 மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி இத்தாலி விஜயம்

(டில்லி)

ஜி 7 நாடுகளின் 50 ஆவது உச்சி மாநாட்டில் பங்கேற்க எதிர்வரும் 14 ஆம் திகதி இந்தியப் பிர தமர் நரேந்திர மோடி இத் தாலிக்கு விஜயம் மேற் கொள்ளவுள்ளார்.




ஜி 7 அமைப்பில் அமெ ரிக்கா, பிரிட்டன், ஜப்பான், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன.

அந்தவகையில் இத்தாலி யின் ஃபசானோ நகரில் நாளை மறுதினம் 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள குறித்த உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பைடன் மற்றும் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் மோடி விசேட பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 'இந்தியப் பிரதமராக பதவியேற்ற நரேந்திர மோடிக்கு வாழ்த்துக்கள்...'

### ஆறு நாட்கள் தாமதமாக வாழ்த்திய பாகிஸ்தான் பிரதமர்



(இஸ்லாமாபாத்)

இந்தியாவில் பிரதமராக மூன்றாம் முறையாக பதவி யேற்றிருக்கும் மோடிக்கு, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஆறு நாட் கள் தாமதமாக வாழ்த்து பகிர்ந்திருப்பது பேசுபொரு ளாகி உள்ளது.

இந்தியாவின் பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக மோடி நேற்று முன்தினம் பொறுப்பேற் றார். பங்களாதேஷ், இலங்கை, மாலைத்தீவுகள், மொரீஷியஸ் என அண்டை நாடுகளின் தலைவர்கள் நேரிடையாக மோடி பதவியேற்பு விழாவுக்கு வருகை தந்திருந்தனர். அண்டை தேசங்களுக்கு அப்பாலான பல நாடுகள் தங்கள் மனமார்ந்த வாழ்த் துக்களை பகிர்ந்து இருந்தன. ஆனால் பங்காளி தேசமான பாகிஸ்தான் கனத்த அமை தியில் ஆழ்ந்திருந்தது.

நடந்து முடிந்த மக்கள வைத் தேர்தலில் பாஜகவின் பிரச்சார வியூகத்தில் பாகிஸ் தானுக்கு முக்கிய இடம் தந்திருந்தது. பாகிஸ்தான் எதிர்ப்பு மட்டுமன்றி பிரதான எதிர்க்கட்சியான காங்கிர ஸின் பாகிஸ்தான் சார்பை முன் வைத்தும் தீவிர பிரச்சா ரத்தை பாஜக மேற்கொண் டது. மோடி மூன்றாம் முறையாக வெற்றி பெற்ற 6 மாதங்களில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை போரிட்டு மீட்பார் என உபி முதல்வர் யோகி ஆதித்ய நாத் பகிரங்கமாக அறிவித் தார்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை பாகிஸ் தான் தேர்தலுக்கானது என அசாம் பாஜக முதல்வரான ஹிமந்த பிஸ்வா சர்மா கிண்டலடித்தார். இந்தியா வுக்கு எதிரானவர்கள் பாகிஸ்தானில் பதுங்கியிருப் பின் அதன் எல்லைக்குள் புகுந்து தாக்குவோம் என பாதுகாப்புத்துறை அமைச் சர் ராஜ்நாத் சிங் அறிவித் தார். இதுதவிர்த்து மோடி, அமித்ஷா போன்றவர் களின் பிரச்சாரங்களிலும் பாகிஸ்தான் எதிர்ப்பே பிரதா னமாக இருந்தது. நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள், சாத னைகளில் பாஜகவின் பங்கு குறித்து பேசாது, சதா ராமர் கோயில், பாகிஸ்தான் என்றே பாஜக கூப்பாடு போடுவதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்தன.

இதற்கு பதிலடியாக ராகுல் காந்திக்கு பாகிஸ் தான் ஆதரவளிக்கிறது என் றும் பாஜக தலைவர்கள் பேசினார்கள். அதற்கொப்ப, பாகிஸ் தான் அரசியல் கட்சித் தலை வர்கள் பலரும் மோடி வெற்றிக்கு எதிராகவும், ராகுல் காந்தி, அர் விந்த் கேஜ்ரிவால் ஆகியோருக்கு ஆதரவாகவும் சமூக ஊடக கருத் துக்களை பகிர்ந்தது சர்ச்சையா னது. ஒட்டுமொத்தமாக மோடி தோல்வியை எதிர்பார்த்திருந்த பாகிஸ்தானுக்கு இந்திய பொதுத் தேர்தல் முடிவில் அதிர்ச்சி காத்தி ருந்தது.

தனிப்பெரும்பான்மை கிட்டாது போனாலும், கூட்டணி கட்சிக ளுடன் சேர்ந்து தனது மூன்றாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பட்ட பிரான்ஸ் பாராளுமன்றம்
# ...க்கும் தேர்தல் களம்

...தி இம்மானுவேல் மக்ரோன் அந்நாட்டு பாராளுமன்றத்தை ...ர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வித்துள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு சில வாரங்களுக்கு முன்னர் இரண்டு சுற்றுகளாக வாக்குப்பதிவு நடத்தப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய தேர்தலில் தீவிர வலதுசாரிகளால் அவரது கட்சி படுதோல்வி அடைந்ததை அடுத்து, இம்மானுவேல் மக்ரோன் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.




தீவிர வலதுசாரி தேசிய பேரணி கட்சியின் ஆதரவாளர்கள், ஐரோப்பிய ஒன்றிய தேர்தல்களில் பெற்ற வெற்றியால் உற்சாகமடைந்து, பிரான்சின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் கொண்டாடியதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

ஆட்சியை மோடி அமைத்துள்ளார். பாஜக தலைமையிலான ஆட்சி என்றதுமே உலக நாடுகள் தரப்பிலிருந்து வாழ்த்துகள் வெளியாயின. ஆனால் பாகிஸ்தான் அமைதி காத்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கட்சி அதிகாரபூர்வமாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னரே எங்களால் கருத்து சொல்ல முடியும் என பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அதிகாரிகள் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு விளக்கம் தந்தனர்.

முடிவாக நேற்று முன்தினம் மாலை மோடி பதவியேற்ற பின்னர் நேற்று மதியம், பாகிஸ்தான் பிரதமரிடமிருந்து எக்ஸ் தளத்தில் ஒருவரி வாழ்த்து வெளியாகி இருக்கிறது. 'இந்திய பிரதமராக பதவியேற்ற நரேந்திர மோடிக்கு வாழ்த்துகள்' என்ற சுருக்கமான வாழ்த்து அதில் இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே இழுபறியில் உள்ள இந்தியா-பாகிஸ்தான் உறவு, மோடியின் மூன்றாவது ஆட்சியின் தொடக்கமாக சுணக்கத்துடனே ஆரம்பித்துள்ளது. (நி-6)

# திணறப் போகும் வடகொரியா
## பதிலடியை அறிவித்தது தென்கொரியா

(சியோல்)

வட கொரியாவுக்கு எதிராக எல்லையில் ஒலிபெருக்கி பிரசாரம் மீண்டும் தொடங்கப்படும் என்று தென்கொரியா அறிவித்துள்ளது.


தென்கொரிய தேசிய பாதுகாப்பு இயக்குனர் தலைமையில் உயர் அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் கூடிய போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடகொரியா அணு ஆயுதங்களை அடிக்கடி சோதனை நடத்தி வருவதால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவி வருகிறது.

இதனை ... வகையில் தென்கொரியாவில் இருந்து வடகொரியாவுக்கு எதிரான பிரசுரங்கள் அடங்கிய பலூன்கள் கடந்த மாதம் அனுப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அதற்கு பதிலடியாக வடகொரியா, குப்பைகள், கழிவுகள் அடங்கிய பைகளை ஆயிரக்கணக்கான பலூன்களில் கட்டி தென்கொரியாவுக்கு அனுப்பியது.

இதன்காரணமாக வடகொரியா எல்லையில் ஒலிபெருக்கி பிரசாரத்தை மீண்டும் தொடங்குவதற்கு தென்கொரியா முடிவு செய்துள்ளது.



இதேவேளை, இதற்கு எதிராக வடகொரியா நேரடி இராணுவ தாக்குதல் நடத்தக் கூடும் என்பதால் வீரர்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறு தென்கொரிய இராணுவ கமாண்டர்களுக்கு அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை விமானநிலையத்தில் தங்கத்துடன் சிக்கிய இலங்கையர்

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் வைத்து இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பெருந்தொகை தங்க நகைகளை கடத்த முற்பட்ட வேளையில் சுங்க அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். 13.5 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன் பெறுமதி சுமார் ஒன்பது கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை சிங்கப்பூரில் இருந்து வந்த இலங்கையரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.


கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட இண்டிகோ விமான நிறுவன ஊழியர் ஒருவருடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரிய தங்க கடத்தல் கும்பல் ஒன்றுடன் தொடர்புடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

# இலங்கை- பங்களாதேஷ் இடையே படகு சேவை

(டில்லி)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்கச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனாவுக்கும் இடையிலான இருதரப்பு கலந்துரையாடல் இடம்பெற்றது.



நேற்று திங்கட்கிழமை புதுடில்லியிலுள்ள ஐ.டி.சி. ஹோட்டலில் இந்த இருதரப்பு கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கூடிய விரைவில் கைச்சாத்திடப்படும் என ஜனாதிபதி ரணில் பங்களாதேஷ் பிரதமருக்கு தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைக்கும் பங்களாதேஷ்க்கும் இடையில் பயணிகள் படகு சேவையை ஆரம்பிக்க இந்தக் கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 300-450 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 120-150 | 250 |
| தக்காளி | 450 | 300 | 450 | 300 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 150 | 140 | 100-120 | 200 |
| கோவா | 400 | 260 | 300 | 200 | 350 |
| கரட் | 350 | 350 | 450 | 250 | 500 |
| பூசணி | 140 | 150 | 140 | 100 | 150 |
| புடோல் | 200 | 200 | 150 | 130 | 300 |
| வாழைக்காய் | 160 | 130 | 120 | 70-80 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 250 | 250-520 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 1200 | 600 | 100 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 220 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 120 | 100 | 160 |
| பயற்றங்காய் | 550 | 450 | 350 | 300-500 | 450 |
| லீக்ஸ் | 650 | 650 | 650 | 400 | 700 |
| பீற்றூட் | 500 | 500 | 450 | 300 | 600 |
| கறிமிளகாய் | 400 | 500 | 250 | 400 | 520 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 400 | 250-450 | 800 |
| போஞ்சி | 800 | 650 | 700 | 400 | 900 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 350 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 140 | 160 | 100 | 100-120 | 150 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 500-1100 | 1300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 100 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 450 | 450 | -- | 400 |
| வெங்காயப்பூ | 650 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 80 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 120 | 100 | 300 |

# பாதுகாப்பு பிரதானிகளின் சேவைக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

அனைத்து பாதுகாப்புப் பிரதானிகளின் சேவைக் காலத்தையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் இறுதி வரை நீடிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரை நாட்டின் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை இலகுவாகப் பேணுவதற்கு ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

முப்படைத் தளபதிகள் மற்றும் அனைத்து பாதுகாப்புப் பிரதானிகளும் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை பதவியில் இருப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## இன்று ஒரு தகவல் 149



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# புரியாத புதிர்கள்

ஒருவர் வந்தார். "சார்! தலையை பிய்த்துக்கொள்வதைப் போல் ஏதாவது தகவல் இருந்தால் சொல்லுங்கள்" என்றார். இப்போது தினமும் அப்படித் தானே சார் நடக்கிறது என்றேன். "இருந்தலும் அது போதாது சார்! இன்னமும் கடுமையாக வேண்டும்" என்றார். அவர் மிகவும் அறிவு பூர்வமான ஆசாமியாகத் தெரிந்தார். சரி இவரை இன்றைக்கு முடிந்த அளவுக்குக் குழப்பிப் பார்க்கலாம் என்று ஆரம்பித்தேன்.

அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டேன். "சார் நான் சொல்வதெல்லாம் பொய் என்று ஒருவன் சொல்கிறான். அது உண்மையா? பொய்யா?" என்று கேட்டேன். அவர் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தார். அது தான் நான் சொல்வது பொய் என்று அவனே சொல்லுகிறானே சார் அப்புறம் என்ன சந்தேகம். அது பொய் தானே என்றார்.

சரி அவன் சொல்லுவது பொய் என்று சொல் லுகிறீர்கள். அவன் என்ன சொல்லுகிறான். நான் சொல் வது பொய் என்று சொல்லுகிறான். அப்படி என்றால் அவன் பொய் என்று சொல்லுவது பொய்! அப்போது அது உண்மை என்று தானே ஆகும்! என்று ஆரம்பித்தேன்.

அவர் லேசாக தலையை சொரிய ஆரம்பித்தார். சரி கச்சேரி களைகட்ட ஆரம்பித்துவிட்டது என்பதை புரிந்து கொண்டேன். இன்னொரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள் என்று ஆரம்பித்தேன். ஒரு புத்தசாலியான பெரியவர். அவர் ஏதோ தப்பு செய்து விட்டார். விசாரணை செய்தார்கள். எல்லாம் முடிந்ததும் கடைசியாக நீதிபதி அவரைப் பார்த்து சொன்னார்."உங்கள் கடைசி விருப்பத்தைச் சொல்லலாம். ஆனால் ஒரு விடயம். நீங்கள் உண்மையைச் சொன்னால் உங்களைத் தூக்கிலே போடுவோம். பொய் சொன்னால் உமது தலை வெட்டப்படும்" என்றார் நீதிபதி.

அந்தப் புத்திசாலியான பெரியவர் உடனே "அப்படி என்றால் என் தலை வெட்டப்பட்டும்"என்றார். இதைக் கேட்டதும் தண்டனையை தள்ளி வைத்துவிட்டார்கள். ஏன் தெரியுமா? அவர் தலையை வெட்டிவிட்டால் அவர் செய்த குற்றம் உண்மை என்று ஆகும். அது உண்மை என்று ஆனால் அவரை தூக்கிலே போட்டு இருக்க வேண்டும். சரி அவரை தூக்கிலே போடலாம் என்றால் அவர் சொன்னது பொய் என்று ஆகிவிடும். அதனால் அவர் தலை வெட்டப்பட்டிருக்க வேண்டும். இப்போது அவரை என்ன செய்வது? என்று எனக்கு எதிரே உட்காந்திருந்தவரைக் கேட்டேன். நிஜமாகவே அவர் இப்போது குழம்ப ஆரம்பித்தார். அவர் ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார். இதற்கு நான் என்ன செய்ய முடியும். அவர் தானே இது மாதிரியான தகவலைக் கேட்டார்? இப்போது நான் சொன்ன உதாரணங்கள் ஏற்படுத்துகின்ற குழப்பம் அதற்குப் பெயர் தான் Paradox அதாவது முரண் உரை அல்லது புரியாத புதிர்.

அறிவியல் துறையிலேயும் இது மாதிரியான சிக்கல்கள் ஏற்படுவது உண்டாம். சமீபத்தில் ஒரு கட்டுரை படித்தேன். அதிலே அதைப்பற்றி நிறைய சொல்லியிருந்தாரகள். அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போது எதிரிலே உட்கார்ந்து இருக்கும் நண்பருக்கு திருப்தியாக இருப்பது போல் ஒரு கதை சொல்லுவோம்.

ஒரு ஆள் ஒரு பெரிய கடைக்குள்ளே நுழைந்தார். அது ஒரு டிப்பார்ட்மென்டல் ஸ்டோர். அவர் எதையோ யாருக்கும் தெரியாமல் எடுத்துவிட்டார் போல இருக்கிறது. அவரை அழைத்து தனியாக விசாரித்து இருக்கிறார் அந்தக் கடைக்காரர். அந்த ஆள் அவரைப் பார்த்து, "அது சரி கடைக்காரரே! நான் உங்கள் கடைக்குள் நுழைந்ததை நீங்கள் பார்த்தீர்களா?"என்றார். ஆம் பார்த்தேன் என்றார் அவர். சரி இதற்கு முதல் என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? என்று கோட்டார் அந்த ஆள். இல்லை என்றார் கடைக்காரர்.

அப்படி என்றால் கடைக்குள்ளே நுழைந்தது நான் தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் என்றார் அந்த ஆசாமி. கடைக்காரர் தலையைப் பிய்த்துக் கொள்ள ஆரம்பித்தார். இந்தக் கதையை சொல்லிவிட்டு எதிரிலே இருந்த நண்பரைப் பார்த்தேன். ஆரம்பத்திலே தலையைப் பிய்த்துக் கொள்வது போல் தான் தகவலைக் கேட்டார். இப்போது அவர் சட்டையையும் பிய்த்துக் கொண்டு தெருவில் இறங்கிப் போய்க்கொண்டிருந்தார். அநேகமாக இனிமேல் இந்தப் பக்கம் வரமாட்டார் என்று நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமாதாநகர் வழியாக பேருந்து சேவை நடத்துங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் புதிய வழித் தடத்தில் பேருந்து சேவைகள் நடத்தப்பட வேண்டும் என பல கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முழங்காவில் உப நகரத்தில் இருந்து இரணைமாதா நகர, நாச்சிக்குடா, செபஸ்ரியார்புரம், கரடிக்குன்று, ஜேம்ஸ்புரம், நாச்சிக்குடா சந்தி வரையான வழித் தடங்களில் புதிய பேருந்து சேவைகள் இடம் பெற வேண்டும்என மேற்படி கிராமங்களின் மக்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

முழங்காவில் பேருந்து நிலையத்தில் நீண்ட நேரம் தரித்து நிற்கும் பேருந்துகள் குறுகிய பேருந்து சேவைகளை நடத்துவதன் மூலம் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள், மாணவர்கள் பெரும் பயனடைவார்கள். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுத்து குறித்த பேருந்து சேவையை நடத்த அனுமதி வழங்க வேண்டும் என மேற்குறித்த கிராமங்களின் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-350)

# பருத்தித்துறை மருத்துவமனைக்குள் புகுந்து தாதியர், காவலாளி மீது தாக்குதல்

## கண்டித்து போராட்டம்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குள் புகுந்து தாதியர் மீதும் காவலாளி மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை கண்டித்தும் தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகவும் கூறி மருத்துவமனை தரப்பினரினால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று திங்கட்கிழமை மதியம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு மருத்துவமனைக்குள் புகுந்த சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவரை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றவில்லை என கூறி தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் தாதியர் ஒருவரையும் காவலாளி ஒருவரையும் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதில் தாதியர்கள், சிற்றூழியர்கள், மருத்துவர்கள், காவலாளிகள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6-60)



கிளி/பாரதிபுர மகா வித்தியாலயத்திற்கு பிரபஞ்சம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.11 இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்களுடன் கூடிய ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

(படம்: தேவானந்தன், யதுபாஸ்கரன்)

# மாற்றுத்திறனாளி பட்டதாரிகளுக்கு எனது ஆட்சியில் முன்னுரிமை

## சஜித் வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்து கலந்துரையாடியதுடன் பாராளுமன்றில் குறித்த விடயம் தொடர்பாகப் பேசுவதாகவும் வாக்குறுதியளித்தார்.

வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம்முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது எமது ஆட்சி உருவாகும்போது கல்வித் துறையில் சீர்திருத்தம் கொண்டுவருவதாகவும், மாற்றுத் திறனாளி பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவித்தார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச்செயலாளர் உமா சந்திரபிரகாஷ் உள்ளிட்ட அமைப்பாளர்களும் உடனிருந்தனர். (நி-6-33)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3140

### சதுர்சன்




### கீர்த்தனா




### தேனு

மனிதனை நம்பாமல்
கதவைப் படைத்தான்...

கதவை நம்பாமல்
பூட்டைப் படைத்தான்..!

பூட்டை நம்பாமல்
மனிதனை காவலுக்கு
வைத்தான்..!

மீண்டும் மனிதனை
நம்பாமல் கேமராவை
வைத்தான்..!!

### டிபிஷ்




### சஞ்சய்

"லட்டு" ப் போல பொண்ணு பார்த்து உன் மகனுக்கு கட்டி வச்சியே எப்படி இருக்கா உன் புது மருமகள்?

"பூந்தி" போல குடும்பத்தை உடைத்து தனி குடித்தனம் போய்ட்டா!?

### சாம்பவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 504





இரண்டாம்அத்தியாயம்

மோக வலை

வயது முதிர்ந்த பிறகு இளம் பெண்ணை மணந்து கொள்வோர் எப்போதும் சந்தேகம் என்னும் மாயா உலகத்தில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு அந்நியர்கள் யாரைக் கண்டாலும் இயற்கையான அருவருப்பு ஏற்படுகிறது. பழுவேட்டரையருக்கு இத்தகைய அருவருப்பு ஏற்பட அதிகக் காரணம் இருந்தது. நந்தினி தமக்கு முன்னால் வந்து நின்று பேசத் தொடங்கியதை அவர் சிறிதும் விரும்பவில்லை. அதே சமயத்தில் நந்தினியைக் கடிந்து கொள்ளவும் அவரால் முடியவில்லை.

எனவே நந்தினி கேட்ட கேள்விக்கு மறுமொழியாக, "ராணி! இந்த உலகத்தில் நமக்குத் தெரியாதவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். எல்லாரையும் நாம் பார்த்து அறிந்திருக்க முடியாதல்லவா? அதனால் நமக்கு நஷ்டமும் இல்லை!" என்றார்.

இதைக்கேட்ட பார்த்திபேந்திரன், "ஐயா! சோழ நாட்டின் பொக்கிஷ மன்னரின் பட்ட மகிஷிக்கு என்னைத் தெரியாததினால் நஷ்டம் ஒன்றுமில்லை நஷ்டம் எனக்குத்தான். ஆகையால் என்னை நானே தெரிவித்துக் கொள்கிறேன், அம்மணி! என்னைப் பார்த்திபேந்திரப் பல்லவன் என்று அழைப்பார்கள்!" என்று சொன்னான்.

"ஓ! அப்படியா? தங்கள் பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்!" என்றாள் நந்தினி.

"பார்த்திபேந்திரா! ஏன் விருதுகளை விட்டுவிட்டுப் பெயரை மட்டும் சொல்லிக் கொண்டாய்? இவ்வளவு தன்னடக்கமும், பணிவும் எப்போது ஏற்பட்டன? நந்தினி! இவன் வெறும் பார்த்திபேந்திரன் அல்ல. வேங்கியும் கலிங்கமும் வென்று வீரபாண்டியன் தலைகொண்ட பார்த்திபேந்திரப் பல்லவன்!" என்று பழுவேட்டரையர் பரிகாசக் குரலில் கூறினார்.

நந்தினியின் முகம் ஒரு கண நேரம் புயல் குமுறும் வானத்தைப்போல் இருண்டது. அவளுடைய இரு கண்களிலிருந்தும் இரு மின்னல்கள் தோன்றி ஒளி வீசி உடனே மறைந்தன. அடுத்த கணம் அவள் கலகலவென்று சிரித்தாள்.

"ஐயா! வீரபாண்டியன் தலைகொண்ட பெருமையான பட்டத்தை எத்தனை பேர் சூட்டிக் கொள்கிறார்கள்! அதற்கு ஏதேனும் கணக்கு உண்டா?" என்று கேட்டாள்.

"அம்மணி! தனாதிகாரி என் பேரில் உள்ள அபிமானத்தினால் அவ்விதம் கூறினார். உண்மையில் அந்த விருதுக்கு நான் உரியவன் அல்ல. வீரபாண்டியன் தலைகொண்ட பெருமை ஆதித்த கரிகாலர் ஒருவருக்கே உரியது!"

"அது ஏன் அப்பா, அவ்விதம் சொல்கிறாய்? செத்த பாம்பை அடித்த பெருமையில் உனக்குக் கொஞ்சமும் பங்கு வேண்டாமா!" என்று பழுவேட்டரையர் பரிகாசக் குரலில் கேட்டு விட்டுக் குறுஞ் சிரிப்புச் சிரித்தார்.

"இல்லை, அரசே! இல்லை! ஆதித்தகரிகாலர் செத்த பாம்பைக் கொல்லவில்லை. அவர் வாளை ஓங்கியபோது வீரபாண்டியன் முழு உயிர் உள்ள பாம்பாகத்தான் இருந்தான். அவன் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தேவலோகத்து மோகினியை ஒத்த ஒரு மங்கை முன்னால் வந்து நின்று கை கூப்பிக் கெஞ்சினாள். வாளை ஓங்கியவன் நானாக இருந்தால், உடனே அவ்வாளை தூரவீசி எறிந்திருப்பேன். வீரபாண்டியன் பிழைத்துப் போயிருப்பான்!" என்று பார்த்திபேந்திரன் பழுவேட்டரையருக்குப் பதில் சொன்னான். ஆனால் அவனுடைய கண்களோ நந்தியின் முகத்தை கூர்ந்து நோக்கின.

நந்தினி, பேச்சு அபாயகரமாகப் போய்க்கொண்டிருப்பதை உணர்ந்தாள். பழுவேட்டரையரைத் திரும்பிப் பார்த்து, "நாதா! அந்தப் பழைய கதை இப்போது எதற்கு? இவர் இங்கு வந்த காரியம் என்னவென்று விசாரிக்கலாமே!" என்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

## கஞ்சப் பிரபு



நடந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார் அவர். ஒரு வெள்ளிப் பணத்தைத் தந்துவிட்டு புறப்பட்டார்.

வண்டி ஓடிக் கொண்டிருந்தது. "இந்தச் சிறிய வேலைக்கு ஒரு வெள்ளிப் பணம் கூலியா? இப்படிப் பொருள் ஈட்டினால் இவன் என்னை விடச் செல்வனாகி விடுவானே. இந்த வேலையை நான் கற்றுக் கொண்டால் நல்ல வருவாய் வருமே. நாள்தோறும் இங்கு வந்து இவன் எப்படி வேலை செய்கிறான் என்று பார்ப்பேன். எல்லா வேலைகளையும் கற்றுக் கொண்ட பிறகு இவனை இங்கிருந்து விரட்டி விடுவேன்' என்று நினைத்தார் அவர்.

அதன்படி நாள் தோறும் அந்த உலைக் களத்திற்கு வந்தார். கொல்லன் எப்படி வேலை செய்கிறான் என்பதை கவனித்தபடி இருந்தார். நாட்கள் சென்றன. கொல்லனுடைய தொழிலில் தான் தேர்ச்சி பெற்று விட்டதாக நினைத்தார் அவர்.

கொல்லனைப் பார்த்து, "இனி உனக்கு இங்கு வேலை இல்லை. எங்காவது ஓடிப்போ. என்னைப் பற்றி உனக்குத் தெரியும். நீ மீண்டும் என் கண்ணில் பட்டால் உன்னைக் கொன்று விடுவேன்," என்று மிரட்டினார்.

அவருக்கு அஞ்சிய அவன், "இனி நான் இங்கு வரமாட்டேன்," என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

மகிழ்ச்சியுடன் உலைக் களத்திற்குள் நுழைந்தார் அவர். வண்டியோட்டியைப் பார்த்து, "இன்று முதல் கொல்லன் தொழிலை நான் செய்யப் போகிறேன். நீ என் உதவியாளர்," என்றார்.

"ஐயா! இந்தத் தொழிலில் எனக்கு ஏதும் தெரியாதே," என்றான் அவன்.

"நான் என்ன சொல்கிறேனோ அதைச் செய். அது போதும். வெளியே நின்று யாராவது இங்கு வருகிறார்களா பார்?" என்றார் அவர்.

"ஐயா, பெரிய இரும்புத் துண்டைத் தூக்கிக் கொண்டு ஒரு ஆள் இங்கு வருகிறான்" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

"பக்கத்து ஊரில் வாழும் உழவன் நான். இந்த இரும்பில் எனக்கு ஒரு கலப்பை செய்ய வேண்டும்," என்றான் அவன்.

அந்த இரும்புத் துண்டைத் தூக்கிப் பார்த்தார். அவர் மிகுந்த கனம் உடையதாக இருந்தது. அதை உருட்டி மேலும் கீழும் பார்த்தார்.

"நல்ல இரும்பு இது. இதில் உறுதியான, நீடித்து உழைக்கும் கலப்பை செய்ய முடியும்," என்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய செயல்கள் நம்மைத் துன்புறுத்துவது, அவற்றைச் செய்த காலத்தில் அன்று. வெகுகாலம் சென்று அது ஞாபகத்திற்கு வரும்போதுதான். ~ ரூஸோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் உயரிய பண்பாட்டை கீழ்நிலைப்படுத்தாதீர்கள்

இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்ற நரேந்திர மோடி அவர்கள் இந்திய அரசியலமைப்புப் புத்தகத்தை விழுந்து வணங்கியதுடன், அதனைத் தனது கண்களில் ஒற்றி தனது மேலான மதிப்பைச் செலுத்தினார்.

இத்தகைய உயரிய செயல்கள் மனித சமூகத்தை பண்பாட்டு விழுமியத்துடன் வாழவைக்கும்.

ஆக, நம் செயல்கள் அனைத்தும் கௌரவத்துக்குரியதாக, பண்பாடு நிறைந்ததாக, தெய்வீகத்தன்மை பொருந்தியதாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் அச்செயல்கள் எமது இளம் சமூகத்தை நல்வழிப்படுத்தும்.

இதை நாம் கூறும்போது, நேற்று முன்தினம் (09) யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு சம்பவம் மனதுக்கு வேதனையைத் தந்தது.

ஆம், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக, ஆர்ப்பாட்டம் நடத்திய யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தாம் பெற்ற பட்டத்தை பாடையில் வைத்துப் போராட்டம் நடத்தினர்.

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துவிட்டு, வேலையில்லாமல் இருப்பதென்பது மிகுந்த மனவருத்தத்தைத் தரக் கூடியது.

தவிர, அத்தகு நிலைமை வீட்டுச் சூழலிலும் சமூக மட்டத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

அதற்காக, படித்துப் பெற்ற பட்டத்தை பாடையில் வைத்துப் போராட்டம் நடத்துவதென்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

இவ்வாறான செயல்கள் கல்விக்கு நம் தமிழ்ச்சமூகம் கொடுக்கின்ற உன்னதமான மதிப்பைக் கெடுப்பதாகவே இருக்கும்.

தவிர, இவ்வாறான செயல்கள் ஆர்வத்தோடு படிக்கின்ற மாணவர்கள் மத்தியில் கல்வி மற்றும் பட்டப்படிப்புத் தொடர்பில் எதிர்மறையான சிந்தனையைத் தோற்றுவிக்கும்.

ஆகையால் படித்துப் பெற்ற பட்டத்தை, பாடையில் வைத்துப் போராடுகின்ற தாழ்நிலைச் செயல்களைச் செய்து எமது இளம் சமூகத்துக்கு தவறான கருத்தியலை ஏற்படுத்தக்கூடாது என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

ஒரு புத்தகம் கீழே விழுந்துவிட்டால் அதனைக் கையிலெடுத்து கண்ணில் ஒற்றி கல்வித் தாய்க்கு மதிப்பளிக்கின்ற நம் உயர்ந்த பண்பாட்டில், விழாக்கோலம் பூண்டு குடை, கொடி, ஆலவட்டம் சகிதம் வேந்தர், துணைவேந்தர், பீடாதிபதிகள் புடைசூழ அழைத்து வந்து பெற்றோர்கள் உளப் பூரிப்போடு பார்த்திருக்க, சான்றோர் பெருமக்கள் கூடியிருக்க, உயர் கல்வியின் உன்னத அடையாளமாக பல்கலைக்கழகத்தின் இலட்சினையை அணிவித்து பட்டச் சான்றிதழ் வழங்கி வைக்க, அந்த உயரிய பட்டத்தை பாடையேற்றுவது நம் தமிழர் பண்பாடல்ல என்பது உணர்தற்குரியது.

## சம்பள முரண்பாட்டிற்கு உரிய தீர்வு கோரி போராட்டத்தில் ஈடுபட ஆசிரியர் சங்கம் முடிவு

(கொழும்பு)

நாடு முழுவதும் பாரிய பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 26ம் திகதி சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் சம்பள முரண்பாடு பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அச்சங்கத்தின் பிரதம செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதன்படி, கொழும்பில் எதிர்வரும் 26ம் திகதி மாபெரும் போராட்டமொன்றையும் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 12ம் திகதியும் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7.10)

## பரீட்சைகளை விரைவாக முடித்து பல்கலைக்கழக அனுமதியை துரிதப்படுத்த நடவடிக்கை – சுசில்

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தர பரீட்சை நிறைவு செய்த உடனேயே உயர்தர கல்வியை ஆரம்பித்து பல்கலைக்கழகத்திற்கான நுழைவை துரிதப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் நேரத்தை வீணடிப்பதை தடுக்க கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை மதிப்பீடு செய்யும் நிகழ்வு கல்வி அமைச்சர் தலைமையில் நேற்று கல்வி அமைச்சில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்படி, 16 வயது முடிந்ததும் உயர்தர கல்வியும், 18 வயதை எட்டியவுடன் பாடசாலைக் கல்வியை முடித்து பல்கலைக்கழகம் நுழைவதற்கான வாய்ப்புகளைத் திறக்கும் நோக்கில், இதுவரை விடுபட்ட கற்கைகளை நிறைவு செய்வதற்காக இரண்டு குழுக்கள் பல்கலைக்கழக அமைப்பில் ஒரே நேரத்தில் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7.10)

## சட்டவிரோத மீன்பிடியை எதிர்த்து முல்லை மீனவர்கள் போராட்டம்

(முல்லைத்தீவு)

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முன்னெடுத்திருந்தனர்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையினை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என மீனவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து மீனவர்களுடன் கலந்துரையாடியிருந்ததோடு,

சட்டவிரோத மீன் பிடி தொடர்பாக மீன்பிடி அமைச்சருடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் விரைவில் குறித்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், எதிர்வரும் வாரத்தில் நடைபெற உள்ள மீனவர்கள் பிரச்சினை தொடர்பான கூட்டத்தில் முக்கிய சில தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் மீனவர்களிடம் உறுதியளித்துள்ளனர்.

இதனையடுத்து மீனவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7.10)

## 30 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

கெஸ்பேவ பகுதியில் சுமார் 30 கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்களுடன் சந்கேநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 13 கிலோ 106 கிராம் ஹெரோயின், 164 கிராம் ஹஷீஸ் போதைப் பொருள், 2 கைத்துப்பாக்கிகள் மற்றும் 2 கார்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

டுபாயில் தலைமறைவாகியுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுட்டு வரும் 'அஹங்கல்லே லொக்கு பெட்டி' உடன் இணைந்து செயற்பட்ட வீரவில, பாதுக்க மற்றும் கல்கிசை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7.10)

## மின்சாரம் தாக்கியதில் பெண் உயிரிழப்பு

### நுவரெலியாவில் சம்பவம்

நுவரெலியா, ராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ராகலை பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பிகளில் சிக்கியதில் இந்த மரணம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் நுவரெலியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7.10)

## கைவிடப்பட்டது பணிப்பகிஷ்கரிப்பு

### இன்று முதல் ரயில் சேவைகள் வழமைக்கு

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சருடனான கலந்துரையாடலின் அடிப்படையில், வேலை நிறுத்தத்தை கைவிட ரயில்வே தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அதன் அடிப்படையில் இன்று முதல் ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பவுள்ளன.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் ரயில் சாரதிகள் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான குறித்த கலந்துரையாடல் நேற்று போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்றது.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு தாமதம், ஆட்சேர்ப்பு தாமதம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, குறித்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி – பகுதி V



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

11

“மதுசாரத்தைப் பருகுவதில் ஒரு சுவையை ஏற்படுத்துவதற்குத் தவறணைக்காரர் இலவசமாக மக்களுக்கு அதனை விநியோகித்தனர். ஏனெனில் அது நாளடைவில் மதுவை மிகுதியாக அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்துவது நிச்சயம் என்பதை அவர்கள் நன்கறிவர்.

சில மாவட்டங்களில் சில ஆண்டுகளுக்கு முன் நூறிலொருவர் தானும் மது அருந்துவது அருமையாக இருந்த இடத்தில், இப்பொழுது கிராமவாசிகள் தம் நிலத்தில் விளையும் தானியங்களை தவறணைக்காரரிடம் அடகுவைத்துச் சாராயம் அருந்துகின்றனர்”.

விவசாயிகளும் தொழிலாளரும் உழைத்த பணம் முழுவதும் இத்தீய வழியிலேயே செலவாயிற்று. களவு, கொள்ளை, சூது, குற்றங்கள் யாவும் அதிகரித்தன.

கோப்பித் தோட்டங்களின் வழியில் ஐரோப்பிய தோட்ட முதலாளிகளும் இந்தியக் கூலியாட்களும் மலைநாட்டினுள் புகவே அப்பிரதேசத்தின் தனிமையும் அமைதியும் மேலும் பங்கப்பட்டன.

புதிதாக வந்தவர்களின் மொழி, பழக்க வழக்கங்கள் ஒன்றையும் அறியாத கண்டியர் அவர்களைத் தம் நாட்டின் செல்வத்தை அபகரிக்க வந்த கயவர், என்றே கருதினர்.

ரொறிங்ரன் “எங்கள் தோட்டங்கள் கண்டியரின் கொடிய பகைமைக்கு ஒரு முக்கிய காரணமாகும்” எனக் கூறினர்.

கண்டியரின் வன்மையான எதிர்ப்புக்கு இலக்கான சட்ட திட்டம், அரசாங்கம் கோப்பித் தோட்ட முதலாளிகளுக்கு நிலங்களை விற்பனை செய்வதற்குக் கையாண்ட நிலக்கொள்கையாகும்.

1834 ஆண்டு தொடக்கம் 1840 வரையில் 247, 000 ஏக்கர் நிலங்கள் ஐரோப்பியருக்கு விற்பனை செய்யப்பட்டன. நிலத்துக்கான போட்டி அதிகரிக்கவே, அரசாங்கம் 1841 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முடிக்குரிய சட்டத்தை இயற்றியது. இதன்படி சட்ட முறைப்படி உரிமைகள் பாராட்டப்படாத முடிக்குரிய நிலங்கள் ஆக்கப்பட்டு ஐரோப்பியருக்கு விற்பனையாயின. இதனால் குடியானவர்கள் தம் காட்டுச் சேனை நிலங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் இழந்தனர்.

### 4. கோல்புறூக்-கமரன் சீர்திருத்தங்கள்

1833 ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்கள் தாழ் பிரதேச மக்களிலும் கூடுதலாகக் கண்டியரையே பல வழிகளிலும் பாதித்தது. இலங்கை மீண்டும் ஒற்றையாட்சியும், ஒற்றுமையும் பெற்றுத் திகழ்வதற்கு கண்டியர் தாம் நீண்ட காலமாக அனுபவித்து வந்த சுதந்திரம், சுயேட்சை யாவற்றையும் கைநெகிழ வேண்டிய நிலைக்குள்ளாயினர்.

கோல்புறூக்-கமரன் சீர்திருத்தங்களின் பயனாக கண்டி மாநிலங்கள் தனி நிர்வாக ஆட்சியின்கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்த முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இலங்கையின் எல்லா மாகாணங்களும் பிரித்தானிய அரசாங்க முகவர்களின் ஆணையின் கீழ் நிர்வகிக்கப்படத் தொடங்கின.

மாகாணங்களின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாயிருந்த திசாவை முறை நீக்கப்பட்டது. அதிகார் என்ற பட்டம் குடியேற்ற நாட்டினால் வழங்கப்படும் கௌரவப்பட்டமாயிற்று. கண்டிப் பிரதானிகள் மாவட்டத்தின் பகுதிகளையும், சிறு பிரிவுகளையும் மேற்பார்வை செய்யும் சிறுதலைமைக்காரர்களின் நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர்.

கிராமிய விவசாய முயற்சிகளுக்கு மூலாதாரமாக அமைந்திருந்த இராசகாரிய முறையினையும் கன்சபாவை முறையினையும் அழிப்பதில் வெற்றிகண்ட கோல்புறூக், கமக்காரரின் விவசாயத்தையும் பொருளாதார நிலையையும் விருத்தி செய்வதற்காக ஒரு மாற்றுத் திட்டத்தை சமர்ப்பிக்கத் தவறியமை, அவர் இந்நாட்டு மக்களுக்கு இழைத்த மாபெருந் தீங்காகும்.

நாட்டின் பொருளாதாரத் துறையில் அரசாங்கம் தலையிட்டு தடைகளை விதிக்கலாகாதென்றும், கட்டுப்பாடற்ற தனி மனிதனின் முயற்சியே தேசத்தின் செல்வநிலையை வளர்க்க வேண்டும் என்றும் கோல்புறூக் உறுதியாக நம்பினார். எனவே அவர் பொருளாதாரத் துறையில் தனியார் முயற்சிக்குக் கதவுகளைத் திறந்து விட்ட பொழுது பண வசதியுள்ளவர்கள் நிலங்களை வாங்கி பெருந்தோட்டங்களைத் தாபித்தனர்.

ஆனால் பணம் இல்லாத ஏழைக் குடியானவர்கள் முன்னையிலும் பார்க்க கூடுதலான இன்னல்களுக்கும் பொருளாதாரக் கஷ்டங்களுக்கும் உள்ளாயினர். நெற்பயிர்ச் செய்கையின் விருத்திக்குப் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனருத்தாரணம் செய்வதை அரசாங்கம் தான் பொறுப்பேற்க வேண்டும் என்பதை கோல்புறூக் உணரவும் உணர்த்தவும் தவறினார்.

விவசாயிகள் மட்டத்தில் தன் பொறுப்பை உணராத அரசாங்கம், அவர்களின் நலனுக்காக எவ்வித திட்டத்தையும் வகுக்கவில்லை. கமக்காரரின் விவசாயம் நாளாந்தம் குன்றி வந்தது.

கண்டி மாகாணங்களினதும் பிற பகுதிகளினதும் நீர்ப்பாசனத் திட்டங்கள் அழிந்துபோன நிலையிற் காணப்பட்டன. மேலும் கோல்புறூக் செய்த சீர்திருத்தங்களுள் பல அக்கால இலங்கைக்கு ஏற்றனவாக அமையவில்லை.

கோல்புறூக், அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைக்கும் நோக்குடன் இலங்கையை ஐந்து மாகாணங்களாக வகுத்தார். இப்புது மாகாணங்கள் வசதியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டனவேயன்றி நாட்டின் புவியியல் சரித்திர, அரசியற் காரணங்களின் அடிப்படையில் வகுக்கப்பட்டனவல்ல.

இம்மாகாணங்களின் நிலப்பரப்பு மிகவும் விசாலமானவையாக இருந்தமையால் குடியியற் சேவையாளர் அவற்றுட் பரந்து கிடந்த குடியானவர்களின் நலன்களை பேணிக் கருமமாற்றுவது முடியாத கருமமாயிற்று.

1845 இல் ஸ்ரான்லி பிரபு குடியியற் சேவையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டிருந்த போதிலும் அதன் தரம் உடனடியாக விருத்தி பெறவில்லை. குடியியற் சேவையாளரின் சம்பளம், வேதனங்கள் குறைக்கப்பட்டமையால் 1833 இற்குப் பின்னர் விவேகம் குறைந்தவர்களே அச்சேவையிற் புகுந்தனர்.

ஆள்பதி ஸ்ருவாட் மக்கன்சியினால் ஊக்குவிக்கப்பட்ட குடியியற் சேவையாளரின் பெரும் பகுதியினர் கோப்பித் தோட்டங்களை திறக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டனர். அவர்கள் மாகாணங்களைப் பரிபாலிக்கும் கருமங்களை விடுத்து தம் முழு நேரத்தையும் தோட்டங்களிலேயே செலவிட்டனர்.

தோட்டத் துரைமாருக்கும் கண்டிக் குடியானவர்களுக்குமிடையே எழுந்த பிணக்குகளில் (விசேடமாக நில விற்பனை) அவர்கள் தோட்ட முதலாளிகளுக்கு ஆதரவாகவே கருமமாற்றினர்.

அவர்கள் சுதேச மொழிகளைக் கற்பதிலும் தம் மாகாணங்களைச் சுற்றிப் பார்வையிடுவதிலும் அக்கறை காட்டவில்லை. பிரதம நீதியரசர் சேர்.

அந்தனி ஒலிபன்ட் கூறியதாவது இந்நாட்டின் ஒரு பெரும் பகுதியில் நிலவும் நிலைகளும் அவற்றின் தேவைகளும் அறியப்படாத நிலையிலேயே இருக்கின்றன. இப்பகுதிகளில் கடந்த 30 ஆண்டுகளில் ஒரு ஐரோப்பியர் தானும், வேட்டை ஆடுவதற்கு சென்றிருந்தாலன்றி, வேறு எதற்கும் கால் வைக்கவில்லை”.

கமரன், கன்சபாவை முறையினை நீக்கியதனால் கிராமிய மக்கள் தம் விவசாயக் கருமங்களை ஒழுங்கு செய்யவும், சச்சரவுகளை இலகுவாகத் தீர்த்து வைக்கவும் பயன்பட்ட ஒரேயொரு நிலையம் சீர்குலைந்து போயிற்று.

கன்சபாக்களின் நீதி அதிகாரங்கள் மாகாண நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டமையினால் கிராம மக்கள் நகரங்களுக்குச் சென்று வழக்கறிஞர்களை ஏற்படுத்தி, அதிக செலவைப் பொறுக்க வேண்டியவராயினர். வழக்கறிஞர்களும் மக்களின் அறியாமையை பயன்படுத்தி ஏமாற்றிப் பணம் பறித்தனர்.

### 5. பௌத்த சங்கம்

கலகத்துக்குரிய பிறிதொரு காரணம் பிரித்தானிய அரசாங்கம் பௌத்த மத ஈடுபாடுகளினின்று விலகிக்கொண்டதனால் பௌத்த சங்கம் அதிருப்தி கொண்டமையாகும். 1841 ஆம் ஆண்டு பௌத்த பிக்குகள் தாமே தம் சங்கங்களின் தலைமைப் பிக்குகளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அத்தெரிவை ஆள்பதி உறுதிப்படுத்துவர் என்றும் அரசாங்கம் சட்டம் ஒன்றினை இயற்றியது.

1847 இல் அரசாங்கம் மேலும் புத்தரின் புனித தந்தத்தின் பாதுகாப்பினை தலதா மாளிகாவின் அதிகாரிகளிடம் ஒப்படைத்து அப் பொறுப்பினின்றும் விலகிக் கொண்டது. இவை வரவேற்கத்தக்க மாற்றங்களாகும்.

ஆனால் முற்காலத்தில் அரசன் தலதாமாளிகாவையின் நிலங்களின் பாதுகாவலனாக விளங்கியதுமன்றி விகாரைகளுக்கு ஆண்டு தோறும் நன்கொடைகள் (தானம்) வழங்கியும் வந்தான். அரசாங்கம் அப்பொறுப்புக்களை நிராகரிக்கவே பிக்குகள் அரசாங்கத்தின்பால் பகைமை கொண்டனர்.

### ஆள்பதி ரொறிங்ரன்

1847இல் வைக்கவுன்ற் ரொறிங்ரன் இலங்கையின் ஆள்பதியாக நியமிக்கப்பட்டார். அன்றைய இங்கிலாந்துப் பிரதமமந்திரி பிரபு ஜோன் இரசலின் உறவினன் என்ற முறையிலே இப்பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 235 ஏக்கர்...

தலைவர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

ஓமந்தை, பனிக்கர் புளியங்குளம் பகுதிக்கு விஜயம் செய்து காணிகளை பார்வையிட்ட பின் நேற்று கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனிக்கர் புளியங்குளம் பகுதியில் வாழ்ந்த மக்கள் பலர் வாழ்வாதார பயிர்ச்செய்கைக்கு நீண்ட காலமாக காணியின்றி அவதிப்பட்டனர்.

இந்நிலையில் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் என்ற வகையில் வனவளத் திணைக்களத்துடன் பல தடவை பேசி ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய தற்போது அம்மக்களுக்கான காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தை, பனிக்கர் புளியங்குளம் குளத்திற்கான காணி உட்பட மக்களின் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைக்காக 235 ஏக்கர் நிலம் வனவளத் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக வருகை தந்து பார்வையிட்டு அதனைத் விடுவித்துள்ளனர்.

இதன் மூலம் இப் பகுதியில் வாழும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஒரு ஏக்கர் காணி வாழ்வாதார நடவடிக்கைக்காக வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,10,250)

## யாழில் போராட்ட...

யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்து கலந்துரையாடியதுடன் பாராளுமன்றில் குறித்த விடயம் தொடர்பாக பேசுவதாகவும் வாக்குறுதியளித்தார்.

வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்றும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போராட்டகாரர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது எமது ஆட்சி உருவாகும்போது கல்வித்துறையில் சீர்திருத்தம் கொண்டுவருவதாகவும், மாற்றுத் திறனாளி பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (ம-7,10,33)

## 992 விமான...

டெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - தேவிபுரம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்தே நேற்று இந்த தோட்டாக்கள் புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கிணற்றை சுத்தம் செய்வதற்கு உரிமையாளர் தயாரானபோது, கிணற்றில் தகரப் பெட்டியின் ஒரு பகுதி காணப்பட்டுள்ளது.

இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து விமான எதிர்ப்பு தோட்டாக்களை எடுத்துள்ளதுடன், முல்லைத்தீவு நீதிமன்றத்திலும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தோட்டாக்கள் வெடிக்காமல் நல்ல நிலையில் இருப்பதாகவும், போரின் போது யாரோ ஒருவரினால் இவை கிணற்றில் போட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய புதுக்குடியிருப்பு பொலிஸார் விமான எதிர்ப்பு தோட்டாக்களை வெடிக்கச் செய்து அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10)

## இளம் பெண்...

ணின் தந்தையும் அண்ணாவும் ஏற்கெனவே உயிரிழந்துள்ளனர்.

சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## சுவர் இடிந்து...

சுவர் இடிந்து வீழ்ந்ததில் காயமடைந்த குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குழந்தை உயிரிழந்தமை தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,250)

## தமிழீழம்...

மாகத்தான் அவர்களுக்கு மத்தியில் ஆட்சி செய்ய முடியவில்லை.

அதேநேரம், மோடி இலங்கைத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார். மோடிக்கு முக்கிய கோரிக்கையை முன்வைக்கிறேன்.

ஈழத்தில் இருக்கும் மக்களை பாதுகாக்க தமிழ் ஈழம் உருவாக வேண்டும்.

மோடி பிரதமரானதில் எனக்கு மிக மகிழ்ச்சி. சீமானின் வெற்றியால் விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சீமான் என்னிடம் தனி நாடு வேண்டும் எனக் கோரிக்கை வைக்க வேண்டும் எனக் கூறினார். அதனைத் தான் நானும் கூறுகிறேன்." எனவும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## மாகாண...

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 228 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் யாழ்ப் பாணம், பருத் தித்துறை, கொட்டாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு தலைவர்கள் யாழ்ப்பாண மக்களை அரசியல் இசை நாற்காலி விளையாட்டிற்கு உட்படுத்தியுள்ளனர். அவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வந்து வெவ்வேறு இடங்களில் பல்வேறு விடயங்களை செய்கிறார்கள். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்பது விசித்திரமான ஒன்றல்ல, அது எமது நாட்டின் சட்டப் புத்தகத்தில் உள்ள விடயமொன்றாகும். யார் அதுகுறித்து என்ன கதை சொன்னாலும், 13 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அனைத்து மாகாண சபைகளும் தற்போது செயலிழந்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் முன்னைய தேர்தல் முறையிலேயே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

தற்போது மாகாண சபைகள் இயங்காவிட்டாலும் மாகாண சபைத் தவிசாளருக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. பெயருக்கு மாகாண சபைகள் இருந்தாலும், மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய சேவைகள் முன்னெடுக்கப்படவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து சட்ட ரீதியிலான ஏற்பாடுகளையும் செய்து, மாகாண சபைக் கட்டமைப்பின் ஊடாக சேவையை நாடும் அனைவருக்கும் நீதி நியாயத்தை பெற்றுத் தருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.06.10
சீட்டிழுப்பு இலக்கம் 5500
P 0 2 3 0 4 2
அத சம்பத P 3 0 4 2
சீட்டிழுப்பு இலக்கம் 75

தன நிதானய
திகதி - 2024.06.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1530
P 06 07 34 71 P
Double Chance 71358

மெகா பவர்
திகதி 10/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1848
O 18 01 06 49 80
26089

லக்கி 7 VIP
திகதி 2024.06.10
சீட்டிழுப்பு இலக்கம் 326
G 4 2 6 7 1 9 G

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3742
சீட்டிழுப்பு திகதி 10.06.2024
E 07 25 65 70
E 99294

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.10
சீட்டிழுப்பு இலக்கம் 0809
கும்பம் 04 15 25 35 கும்பம்
21399 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.06.2024 வெற்றி வாரம் 208 வர்ணம் ஊதா
N 0 9 3 9 2 5
35706 B
ரூ. 23,719,568.00

SUPER BALL
2474 ஊதா 10.06.2024 திங்கள்
01 14 50 54 P
25820
ரூ. 92,652,862.40

சனிதா
2024.06.10 வெற்றி வாரம் 4635
07 30 44 62 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,235,932.40
13455

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4186 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.10 தினம் திங்கட்கிழமை
04 07 11 31 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,353,103.20
161123

T 29 13 36 42 62
1650 பச்சை 10.06.2024 திங்கள்
847397
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 526,928,293.80

ஜயோதா Jayoda
2024.06.10 வெற்றி வாரம் 2032 செம்மஞ்சள்
06 07 28 42 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,811,315.20
65122

திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2300
சீட்டிழுப்பு திகதி : 2024.06.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.119,095,293.60
ADA KOTIPATHI
14 42 57 63 C
827762


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0575)

076 825 7716 (ஆகாஸ்)


## மணப்பெண் தேவை

- JAFFNA, இந்து கௌரவகுலம், 1993, விசாகம், Masters degree, Finance analyst, canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர், இந்து கௌரவகுலம், 1994, பூராடம், degree holder, London மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வடமராட்சி, இந்து கௌரவகுலம், 1983, உத்தராடம், Auto mobile Engineering (Moratuwa), Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ஏழாலை - கட்டுவன், இந்து கௌரவகுலம், 1991, திருவோணம், Msc In Computer Science, Software Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நெல்லியடி, இந்து கௌரவகுலம், 1980, அவிட்டம், A/L, Restaurant officer, France, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மீசாலை, இந்து கௌரவகுலம், 1985, உத்தராடம், A/L, Restaurant officer, France, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருகோணமலை - கோப்பாய், இந்து கௌரவகுலம், 1992, உத்தரம், Phd In Computer Science, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து கௌரவகுலம், 1990, அவிட்டம், Bsc (Hons), Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நல்லூர் - வேலணை, இந்து கௌரவகுலம், 1984, பரணி, Bsc Computer Science, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1174)

- 077 539 3728 | - 077 803 8193

## ஆசிரியர்கள் உடன் தேவை

யாழ் நகரில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு தரம் 1 முதல் தரம் 5 வரை சகல பாடங்களும் கற்பிக்கக்கூடிய ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் உடன் தேவை. (1177)

T.P : 077 459 8440

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

உரும்பிராயில் இருந்து கோப்பாய்க்கு செல்லும் வீதியில் உள்ள சிவன் வீதியில் 7 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. (1170)

076 742 4301, 075 710 9639

## பணியாளர் வெற்றிடம்

### யாழ்ப்பாணம்

- கணக்காளர் (பெண்கள்) - (HNDA / கணனி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.)
- கணனி அறிவுடன் கூடிய அலுவலக உதவியாளர் (பெண்கள்)
- வாகனத்தில் பொருட்கள் ஏற்றி இறக்க விநியோகிக்க ஆண்கள் தேவை. (Delivery Boy)
- EPF / ETF கொடுப்பனவு வழங்கப்படும்.
- நிரந்தர தொழில்.

(1172)

Ess Jey Electricals No.9 Stanly Road, Jaffna

021 222 2564, 021 222 7430

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள் (1176)

தொடர்புகளுக்கு:

074 17 37 684

## வேலைக்கு ஆள் தேவை

வீட்டில் தங்கிநின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. (1171)

076 264 4237


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0576)



உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-0576)
வயது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



# அருள்மனை

MSM

12 வருட சேவையின் அடுத்த கட்டமாக

புதுப்பொலிவுடன்

முதியோர் பராமரிப்பு நிலையம் ஆரம்பம்

அனுமதிக்கு விரையுங்கள்

முதல் 10 அனுமதிகளுக்கு விசேட விலைக்கழிவு

## சேவைகள்

- வைத்திய ஆலோசனைகள்
- இயன்மருத்துவ சேவைகள்
- 50m தொலைவில் மருத்துவமனை
- Ambulance வசதி
- அமைதியான சூழல்
- கனிவான கவனிப்பு

24 hours SERVICE EVERYDAY

(C0574)

## பொழுதுபோக்கு அம்சங்கள்

- நூல்கள், பத்திரிகைகள்
- விளையாட்டு உபகரணங்கள்
- தொலைக்காட்சி

CALL US 076-6604306

Medical Sciences Manipay,
Green Memorial Hospital.
Memorial School Lane,
Manipay


# 5ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23.01.1928

உதிர்வு 11.06.2019

அமரர்

## திரு. செல்லையா காஞ்சிமாவடிவேல்

(காஞ்சி அப்பா)

திதி : 15.06.2024

அன்பே உருவாகி எங்கள் மீது பாசம் கொண்ட அப்பாவே
நீங்கள் வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் உயிர்வாழும்
ஆண்டுகள் பல ஆனாலும் ஆறாது எங்கள் மனம்

காட்டுப்புலம்,
தொண்டைமானாறு. (C-0571)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org